பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
20 07 2026 MONDAY 6 30 PM
வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, இரு அவைகளும் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

- பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- மேகதாது அணை விவகாரம் குறித்து, முதலமைச்சர் திரு. விஜய் இன்று சென்னையில் விரிவாக ஆலோசனை மேற்கொண்டார்.

- காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை பெற, த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

- ஆல் இங்கிலாந்து ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, இரு அவைகளும் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

இன்று மாநிலங்களவை கூடியதும், புதிய உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நீட் தேர்வு முறைகேடு பிரச்சினையை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, அவை நடவடிக்கைகள் 6 முறை ஒத்தி வைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

மக்களவையிலும் இதே பிரச்சினையை எழுப்பி, எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அவை நடவடிக்கைகள், 6 முறை ஒத்தி வைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>>><<<<<

பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், குறிப்பாக, பெண் குழந்தைகள் கல்வி பயில்வது அதிகரித்துள்ளதாக கூறினார்.

பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் செயல்பட்டு வருவதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் கூறினார்.

>>>>>><<<<<

மேகதாது அணை விவகாரம் குறித்து, முதலமைச்சர் திரு. விஜய் இன்று விரிவாக ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை கர்நாடக அரசு திறந்து விடாதது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாநில அமைச்சர்கள் திரு. ஆனந்த், திரு. ஆதவ் அர்ஜுனா, திரு. நிர்மல்குமார், சட்ட வல்லுநர்கள் மற்றும் உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் செயல்பாடுகள் குறித்து, மாநில அமைச்சர் திரு. வெங்கடரமணன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இன்று சென்னையில், இந்த வாணிப கழகத்தின் தலைவராக பொறுப்பேற்ற பின்னர், அவர் இந்த ஆய்வினை மேற்கொண்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பொது விநியோக திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர் விரிவாக கேட்டறிந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

தமிழகத்தில் சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. மதன்ராஜா தெரிவித்துள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - மதன்ராஜா 55 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

திமுக-வைச் சேர்ந்த விளாத்திக்குளம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டிருப்பது, கடும் கண்டனத்திற்குரியது என்று அக்கட்சித் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், ஆட்சியின் தவறுகளை சுட்டிக்காட்டும் திமுகவைச் சேர்ந்தவர்களை த.வெ.க அரசு கைது செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இது, ஜனநாயக பண்புகளுக்கு எதிரானது என்றும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை வழங்க மறுக்கும் கர்நாடக அரசின் செயல் கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உச்சநீதிமன்ற உத்தரவினை மீறி கர்நாடக அரசு இதுபோன்று செயல்படுவது ஏற்புடையதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம், நாளை மறுநாள் புதுதில்லியில் நடைபெறவுள்ளதாக வெளியான செய்திகளை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கூட்டத்தில் தமிழகத்திற்கு உரிய நீரை பெற, த.வெ.க. அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<

நீதிமன்றங்களில் சாட்சியம் அளிக்க ஆஜராகும்போது, முறையான சீருடை அணிந்து செல்லவில்லை என்றால், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறையினருக்கு சுற்றறிக்கை அனுப்புமாறு சென்னை உயர்நீதிமன்றம், காவல்துறை தலைவருக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மேல்முறையீட்டு வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. செந்தில்குமார் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இந்த சுற்றறிக்கையை நான்கு வாரங்களுக்குள் அனுப்ப வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

இந்தியன் வங்கி சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் சார்பில், இலவச பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக காஞ்சிபுரத்தில் உள்ள அந்த மையத்தின் இயக்குநர் திரு. உமாபதி கூறியுள்ளார்.

இன்று, இம்மையத்தில் ஓட்டுநர் பயிற்சி முகாம் தொடக்க விழாவில பங்கேற்ற பின்னர், எமது செய்தியாளரிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - உமாபதி 45 செகண்ட்ஸ்)

இந்த பயிற்சியில் பங்கேற்பது தங்களுக்கு பெரிதும் பலனளிக்கும் என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 33 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தென்காசியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ முகாமினை ஆட்சியர் திருமதி. Vandana Garg இன்று பார்வையிட்டார்.

>>>>>><<<<<

தூத்துக்குடியில் உள்ள உலக பிரசித்தி பெற்ற பனிமய மாதா பேராலய திருவிழாவை முன்னிட்டு, அடுத்த மாதம் 5ஆம் தேதி அம்மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

சென்னை மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆல் இங்கிலாந்து ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில், Sai Nachiketh Bhatraju தங்கப்பதக்கத்தையும், Karthik Rupa Suhaas வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>><<<<<

உலக கோப்பை ஜூனியர் ஸ்குவாஷ் போட்டி, கனடாவில் இன்று தொடங்குகிறது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 180-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் Anahat Singh, Rudra Singh, Anika Dubey, Saanvi Kalanki ஆகியோர் மகளிர் பிரிவிலும், Aryaveer Dewan, Yusha Nafees, Gurveer Singh, Purav Rambhia ஆகியோர் ஆடவர் பிரிவிலும் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி, சீனாவின் Hangzhou-வில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் மனுபாக்கர், இளவேனில் வாலறிவன் உட்பட 36 பேர் இதில் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<

ஆசிய இளையோர் ஐவர் ஹாக்கிப் போட்டி, மஸ்கட்டில் இன்று தொடங்கியது.

>>>>>><<<<<

சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில், இந்தியாவின் Arjun Erigaisi இரண்டாவது இடத்தில் உள்ளார்.

>>>>>><<<<<

Ulaanbaatar-சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதிச்சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் Sarthak Arya மற்றும் Yashansh Malik வெற்றி பெற்றனர்.

>>>>>end<<<<<